**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**THIRUVIDAIMARUTHUR.**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Witness for | : PW–1 | Date | : 28.01.2026 |
| Case No. | **: O.S.24/2024** | Nationality | : Indian |
| Name | : ஞானசௌந்தரி | Religion | : |
| Father's/Husband's Name | : பாஸ்கர் | Age | : 57 |
| Village | : | | |
| Taluk | : | | |

<u>வா.சா.1</u>

சாட்சி சத்திய பிரமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது கணவர் பாஸ்கரனுக்கு வாரிசு சான்று கோரி தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு எனது வழக்கறிஞரிடம் வழக்கு விவரம் நான்தான் சொன்னேன். 1 முதல் 3 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு பதிலுரை தாக்கல் செய்த விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரியும். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது கணவருக்கு 2வது மனைவி மூலம் பிறந்த வாரிசுகள் என்று உரிமை கோருகிறார்கள். எனது கணவர் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக பணிபுரிந்தார். எனது கணவர் பணிபுரிந்து இடையில் நின்றுவிட்டார். எனது கணவர் சரியாக பணிக்கு செல்லாததால் அவரை பணியில் இருந்து நீக்கிவிட்டார்கள் என்றால் சரிதான். எனது கணவர் பணியில் இருந்து நீக்கப்பட்டவுடன் நான் அவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரியல்ல. அவர் பணியில் இருந்து நீக்கிய பிறகு 1 முதல் 3 பிரதிவாதிகளும் அவரது தாயாருடன் திருப்பனந்தாளில் மாரியம்மன் கோவில் நடுத்தெருவிலும், ஊருடையப்பர் கோவில் தெருவிலும் எங்களுக்கு தெரிந்துதான் வசித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. எனது மாமனார் மருத்துவர் கணேசன் என்றால் சரிதான். எனது மாமனார் டாக்டர் கணேசனுக்கு எனது கணவர் பாஸ்கர் மற்றும் டாக்டர் மனோகரன், ஸ்ரீதர், தெய்வாணை, எனது மாமியார் மனோன்மணி

ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது மாமனாரின் வாரிசுகளுக்குள் ஏற்பட்ட பாகப்பிரிவினை சம்மந்தமாக என் மீதும் எனது மாமியார் மற்றும் மகள் மீது இதர வாரிசுதாரர்கள் பாகப்பிரிவினை கேட்டு கும்பகோணம் கூடுதல் மாவட்ட நீதிபதி விரைவு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 177/2021 தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பினர்கள் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்த விவரம் குறித்து நான் இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து கட்சியாடி வருகிறேன். எனது கணவர் 04.08.2021 அன்று இறந்துவிட்டார். எனது கணவர் இறக்கும் காலம் வரை 1 முதல் 3 பிரதிவாதிகளுடனும் அவரது தாயாருடனும் சேர்ந்து வாழ்ந்தார் என்றாலும் அவர் இறந்த செய்தி கேட்ட பிறகு தான் நான் எனது கணவர் வீட்டிற்கு வந்தேன் என்றால் சரியல்ல. எனது கணவருடன் நானும் அவரது தாயாரும் மட்டும்தான் தனியாக வாழ்ந்து வந்தோம். எனது கணவரின் இறுதி சடங்கில் 2 வது மனைவி கலந்து கொண்டார் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் எனது கணவரின் வாரிசுகள் என்றாலும் வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகள் எங்களுடன் சேர்ந்த சட்டப்படியான வாரிசுகள் என்றால் சரியல்ல. 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு கிடைக்க வேண்டிய சொத்துக்களை நான் அபகரிக்க வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**( 4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

Sd/- P. Rangeswari,
District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur (FAC).